## திருநெல்வேலி மாநகராட்சி

## 2020ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சி. மேலப்பாளையம் மண்டல எல்கைக்குட்பட்ட குலவணிகர்புரம், வார்டு எண் 28-ல், நகரளவை வார்டுAV, பிளாக் எண் 8, நகரளவை எண் 20 ப.பு.எ.683 களம் புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் 0.14.97 ஹெக்டேர் உள்ள இடத்தில் பழைய மாநகராட்சிக்கு சொந்தமான உபயோகமற்ற நிலையில் உள்ள கழிப்பிடம் ஒன்று உள்ளது. மேற்படி கட்டிடத்தை அப்புறப்படுத்திவிட்டு தற்போது மேற்படி இடத்தில் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட இடம் தேவையாக உள்ளதால் நிலமாற்றம் செய்ய பாளையங்கோட்டை வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டு கடிதம் ந.க.எண் ஆ5/5116/2019, நாள் 01.07.2020 மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி. மேலப்பாளையம் மண்டல எல்கைக்குட்பட்ட குலவணிகர்புரம் வார்டுஎண் 28-ல், குலவணிகர்புரம் கிராமம் நகரளவு வார்டு எண்AV, பிளாக் எண் 8, நகரளவை எண் 20-ல் 0.14.97 ஹெக்டேர் புறம்போக்கு இடத்தில் பழைய மாநகராட்சி கழிப்பிடம் உபயோகம் இல்லாமல் பழுதடைந்து உள்ளது. மேற்படி இடத்தில் உள்ள பழுதடைந்த கழிப்பிட கட்டிடத்தை அகற்றிவிட்டு அதில் ஆதிதிராவிடர் நலமாணவியர் விடுதி கட்டிடம் கட்ட நிலமாற்றம் செய்ய மாநகராட்சி சார்பில் ஆட்சேபணை எதுவும் இல்லை என மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 71:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/3227/2020-மே.பா.)

---

2) திருநெல்வேலி மாநகராட்சியில் விரிவாக்கப் பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைக்கப்படாமல் சரள் சாலைகளாக இருப்பதன் காரணமாக போக்குவரத்திற்கு சிரமமாக இருப்பதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி,7 இடங்களில் தார்ச்சாலைகளை 6.12 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூ.485.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (IUDM - Integrated Urban DevelopmentMission) சாலைகள் அமைப்பதற்கு மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதனை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதன்படி மேற்படி ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (IUDM-Integrated Urban DevelopmentMission)-ன் கீழ்,சாலைப் பணிகள் அமைக்கப்பட வேண்டிய இடங்கள் தேர்வுசெய்யப்பட்டுஅதன் விபரம் பின்வருமாறு:-

| சிப்பம் எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 1.வார்டு எண்.26 காமராஜர் சாலையில் இருந்து ராள் தக்கர் கல்லூரி வளாகம் வரையுள்ள 80அடி திட்டச்சாலையில் தார்த்தளம் அமைத்தல்.<br>2.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 1வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல்.<br>3.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 2வது மெயின் சாலையில் | 485.00 |

| | | |
|---|---|---|
| | தார்த்தளம் அமைத்தல்.<br>4.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 4வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல்.<br>5.வார்டு எண்.47 கக்கன்ஜி நகர், கைவினைஞர் நகர் மற்றும் தங்கலெட்சமி நகரில் தார்த்தளம் அமைத்தல்.<br>6.வார்டு எண்.50 அமராவதிநகர் பகுதிசாலையில் தார்த்தளம் அமைத்தல்.<br>7.இராமையன்பட்டி உரக்கிடங்கு சாலையில் தார்த்தளம் அமைத்தல். | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 7 எண்ணம் இடங்களில் ரூ.485.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (IUDM - Integrated Urban Development Mission)-ன் கீழ் தார்ச்சாலைகள் அமைப்பதற்கு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளின்படி அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.485.00 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம் முறையில் நிறைவேற்றி கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, திருநெல்வேலி மாநகராட்சியில் விரிவாக்கப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (IUDM-Integrated Urban DevelopmentMission) பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 7 இடங்களில் தார்ச்சாலைகளை 6.12 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூ.485.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலைகள் அமைப்பதற்கும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளின்படி சிப்பம் முறையில் நிறைவேற்றி கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்கு அனுமதிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாகும் செலவினத் தொகையை மாநகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 72:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண்இ1/3220/2020)

---

3) திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு) திருநெல்வேலி-07 கடிதம் ந.க.எண் 2455/விற்பனை/2020, நாள் 10.06.2020-ல் தமிழக அரசின் கொள்கைகளை தீவிரமாக செயல்படுத்தும் பொதுமக்களுக்கு தேவையான தரமான பால் எந்தவித தட்டுப்பாடும் இன்றி கிடைக்கும் வண்ணமாகவும், அரசு அலுவலகங்கள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் ”ஆவின்” பார்லர்கள் நிறுவப்பட்டு பால் மற்றும் பால் உபபொருட்கள்விநியோகம் செய்யப்பட்டுவருவதாகவும், இதனை தொடர்ந்து தமிழக அரசின் செயல்பாடுகளை செயல்படுத்தும் விதமாக திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட காந்திநகர் பூங்கா முன்புறம் உள்ள காலி இடத்தில் ஆவின் சார்பாக பாலகம் அமைத்து ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய 13 * 13 - என்ற அளவில் பாலகம் அமைக்க வருவாய் நிபந்தனைகளுக்குட்பட்டு வாடகை நிர்ணயம் செய்து வழங்க அறிக்கை செய்துள்ளனர்.

அதன்படி தமிழக அரசின் கொள்கைகளை செயல்படுத்தும் வகைக்கு திருநெல்வேலி டவுண் காந்திநகர் பூங்கா முன்புறம் உள்ளகாலி இடத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு 13*13 என்றஅளவில் ஒதுக்கீடு செய்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள கட்டிடத்திற்கான பரப்பளவிற்கு மாத வாடகை ரூ.1014/- எனநிர்ணயம் செய்யப்படும்.
2) திருநெல்வேலி மாநகராட்சி நிபந்தனைகளின்படி (எண் 12) குத்தகை காலத்தில் ஒப்படைக்கபபட்டிருக்கும் சொத்துக்கள் முழுவதையும் அல்லது எந்தபாகமாவது மாகராட்சிக்கு தேவையானால் குத்தகைதாரர் எந்தவித தடையும் இன்றி எவ்வித இழப்பு தொகையும் கோராமல் மாநகராட்சியிடம் ஒப்படைத்துவிடவேண்டும் எனவும் இதில் மாநகராட்சி தீர்ப்பே முடிவானது.
3) இதற்கெனரூ.20/- பத்திரத்தில் ஒப்பந்த பத்திரம் தயார் செய்து மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும்.
4) கட்டிடத்திற்கானவாடகையினைபிரதிமாதம் 1ம் தேதிக்குள் செலுத்திவிடவேண்டும்.

அலுவலகக் குறிப்பு:

பொருளில் கண்டுள்ளவாறு தமிழக அரசின் கொள்கைகளை செயல்படுத்தும் வகைக்கு திருநெல்வேலி டவுண் காந்திநகர் பூங்கா முன்புறம் உள்ளகாலி இடத்தில் 13 *13 என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு ஒதுக்கீடு செய்வது குறித்து மாமன்றம் முடிவுசெய்யலாம்.

தீர்மானம் எண்73:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

4) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பசுமையுடன் சாலை வகுப்பி அமைத்து அகலப்படுத்தி அழகுபடுத்தும் (சுடலை கோவில், பெருமாள்புரம் மற்றும் சாரா தக்கர் கல்லூரி வரை) திட்டப் பணியினை ரூ.13.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 9வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 3ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/IHSDP-3 நாள் 22.02.2020-ல் ரூ.13.45 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 4161/2020/DO2, நாள் 28.02.2020-ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 25/2018-19/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 27.02.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 31.03.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பின்னர் 25.03.2020ல் கொரானா (COVID-19) வைரஸ் நோய் தொற்று காரணமாக முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 08.06.2020 வரை நீட்டிக்கப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1)திரு.எஸ்.வெள்ளப்பாண்டி மற்றும் (2)திரு.எஸ்.வேலுச்சாமி ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 09.06.2020ல் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திரு.எஸ்.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 11.06.2020ன்படி மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.எஸ்.வெள்ளப்பாண்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் திரு.எஸ்.வெள்ளப்பாண்டி ஒப்பந்ததாரரின் விலை அட்டவணை

15.06.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | திரு.எஸ்.வெள்ளப்பாண்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பசுமையுடன் சாலை வகுப்பி அமைத்து அகலப்படுத்தி அழகுபடுததும் பணிகள் செய்தல் (சுடலை கோவில், பெருமாள்புரம் மற்றும் சாரா தக்கர் கல்லூரி வரை) | ரூ.12,92,20,622/- | ரூ.13,85,35,735/- |
| | | | 7.21% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு திரு.எஸ்.வெள்ளப்பாண்டி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள தொகை 13,85,35,735/-ஆனது மதிப்பீட்டை விட 7.21% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 15.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஓப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 7.21% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஓப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஓப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு திரு.எஸ்.வெள்ளப்பாண்டி ஒப்பந்ததாரரின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.13,56,17,043/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் ஓப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 17.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 19.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.வெள்ளப்பாண்டி ஒப்பந்ததாரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,56,17,043/- மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) மேற்படி, திருநெல்வேலி மாநகராட்சி - திருநெல்வேலி சீர்மிகு நகர (Smart City Limited) திட்டத்தின் கீழ் பசுமையுடன் சாலை வகுப்பி அமைத்து அகலப்படுத்தி அழகுபடுத்தும் (சுடலை கோவில், பெருமாள்புரம் மற்றும் சாரா தக்கர் கல்லூரி வரை) பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.வெள்ளப்பாண்டி ஒப்பந்ததாரரின இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,56,17,043/- மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1345.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 74:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 25/2018-19/SCM)

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு திட்டப்பணி மேலாண்மை ஆலோசனை நிறுவனம் (Project Management Consultancy) தேர்வு செய்வதற்கு 7வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 15 நாள் 16.09.2019 அன்று தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்படி திட்டப்பணி ஆலோசனை நிறுவனத்தை நியமனம் செய்யும் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 18/2018-19/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழிலும் 28.11.2019-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 30.12.2019-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 05.02.2020 வரை நீட்டிக்கப்பட்டதில் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1)M/s.Rudrabhisek Enterprises Limited, Chennai-40 (2)M/s.WAPCOS Limited, Chennai -101 (3)M/s.Wadia Techno-Engineering Serviced Ltd., Mumbai-400055 (4)M/s.URS Soott Wilson India Private Ltd., Haryana, (5)M/s.TRACTBEL Engineering Private Ltd., Haryana (6)M/s.Almondz Global Securities Limited, New Delhi-110020, (7)M/s.Darashaw & Company Private Limited, Chennai -34, (8)M/s.Egis India Consulting Engineers Private Limited, Gurgaon, Haryana -122001, (9) M/s.SMEC International Private Limited, Haryana -122015 ஆகிய ஒன்பது நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒன்பது ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 06.02.2020ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் (1)M/s.Rudrabhisek Enterprises Limited, Chennai-40 (2)M/s.WAPCOS Limited, Chennai -101 (3)M/s.Wadia Techno-Engineering Serviced Ltd., Mumbai-400055 (4)M/s.URS Soott Wilson India Private Ltd., Haryana, (5)M/s.TRACTBEL Engineering Private Ltd., Haryana (6)M/s.Almondz Global Securities Limited, New Delhi-110020 ஆகிய நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூடட நடவடிக்கை நாள் 27.02.2020ன்படி மேற்படி நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளியான (1)M/s.Darashaw & Company Private Limited, Chennai -34, (2)M/s.Egis India Consulting Engineers Private Limited, Gurgaon, Haryana -122001, (3) M/s.SMEC International Private Limited, Haryana -122015 நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனங்களின் விலை அட்டவணை 24.03.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| பணியின் பெயர் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு திட்டப்பணி மேலாண்மை ஆலோசனை நிறுவனம் (Project Management Consultancy) தேர்வு செய்வது | | | | | | | |
| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொழில் நுட்ப மதிப் பெண் % | தொழில் நுட்ப மதிப் பெண்கள் (80%) | ஒப்பந்த மதிப்பு ரூ. கோடியில | ஒப்பந்த மதிப்பு மதிப் பெண் (20%) | மொத்தம் | ரேங்க் |
| 1 | M/s.Darashaw & Company Private Limited, Chennai -34 | 88.56 | 70.85 | 7,28,60,000/- | 19.13 | 89.98 | 1 |
| 2 | M/s.Egis India Consulting Engineers Private Limited, Gurgaon, Haryana -122001 | 72.1 | 57.68 | 6,96,92,314/- | 20.00 | 77.68 | 2 |
| 3 | M/s.SMEC International Private Limited, Haryana -122015 | 74.92 | 59.94 | 10,78,00,000/- | 12.93 | 72.87 | 3 |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட அட்டவணையில் கண்ட தொழில் நுட்ப மதிப்பெண்கள் (80%) மற்றும் ஒப்பந்த மதிப்பு மதிப்பெண்கள் (20%) –ன் படி அதிக மதிப்பெண் பெற்று முதல் இடம் பெற்ற மெசர்ஸ் M/s.Darashaw & Company Private Limited, Chennai -34 நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள தொகை ரூ.7,28,60,000/- ஆனது (சரக்கு மற்றும் சேவை வரி தவிர்த்து) அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 03.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 10.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று நாங்கள் தெரிவித்திருந்த விலைப்புள்ளி மிகவும் அதாவது சீர்மிகு நகர மொத்த தொகையில் 1 சதவீதத்தைவிட குறைவானதாகும். மேலும் திட்டம் செயல்முறைப்படுத்தும் கால அளவான மூன்று வருடங்களில் ஏற்படும் மாற்றத்தை எதிர்பார்த்து எங்களுடைய விலைப்புள்ளியை தெரித்துள்ளோம். நாங்கள் தெரிவித்திருந்த விலைப்புள்ளி மிகவும் சரியானதாகவும் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளது. இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Darashaw & Company Private Limited, Chennai -34 நிறுவனத்தினை மீண்டும் இரண்டாவது விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 11.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 19.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று நாங்கள் தெரிவித்திருந்த விலைப்புள்ளி மிகவும் அதாவது சீர்மிகு நகர மொத்த தொகையில் 1 சதவீதத்தைவிட குறைவானதாகும். மேலும் திட்டம் செயல்முறைப்படுத்தும் கால அளவான மூன்று வருடங்களில் ஏற்படும் மாற்றத்தை எதிர்பார்த்து எங்களுடைய விலைப்புள்ளியை தெரித்துள்துள்ளோம். நாங்கள் தெரிவித்திருந்த விலைப்புள்ளி மிகவும் சரியானதாகவும் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளது..

மேற்படி இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்வரும் M/s.Darashaw & Company Private Limited, Chennai -34 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.7,28,60,000/- என்பது (சரக்கு மற்றும் சேவை வரி தவிர்த்து) அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 22.06.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் முடிவு செய்திருப்பதின்படி மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சி - திருநெல்வேலி சீர்மிகு நகர (Smart City Limited) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு திட்டப்பணி மேலாண்மை ஆலோசனை நிறுவனத்தினை (Project Management Consultancy) தேர்வு செய்யும் பணியானது மிகவும் அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டியிருப்பதாலும், இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்வரும் M/s.Darashaw & Company Private Limited, Chennai -34 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.7,28,60,000/- என்பது (சரக்கு மற்றும் சேவை வரி தவிர்த்து) அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது குறித்து 22.06.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்டத்தில் முடிவு செய்திருப்பதின்படி நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 75:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 18/2018-19/SCM)

---

6) திருநெல்வேலிமாநகராட்சி,மைய அலுவலக கட்டுப்பாட்டில் பணிபுரியும் தமிழ்நாடு முன்னாள் இராணுவ கழகத்தைச் சார்ந்த பணியாளர்களுக்கு அரசாணை எண். **1115** பொதுத் (முன்னாள் இராணுவத்தினர்) துறை நாள் **25.09.2015** மற்றும் தொழிலாளர் ஆணையர் அறிவிக்கை எண் **Z3/9123/2020** நாள் **17.03.2020**–இன்படி **01.04.2020** முதல் அகவிலைப்படி உயர்வுசெய்து வழங்குவதற்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்கக் கோரியுள்ள தமிழ்நாடு முன்னாள் இராணுவ கழக பொது மேலாளர் கடிதம் எண் TEXCO/1148/TNMW/Revised VDA 2020, dated **04.06.2020** கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்

| வ. எண் | பதவி | தற்போது 1.4.2019 முதல் வழங்கப்படும் அகவிலைப்படியுடன் கூடிய ஊதியம் (மாதம் ஒன்றிற்கு) | 1.4.2020 முதல் கூடுதல் அகவிலைப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டிய ஊதியம் (மாதம் ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| 1 | காவலர் | ரூ. 16639/- | ரூ.19239/- |

அலுவலககுறிப்பு

தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழக பொது மேலாளர் கடிதம் எண் TEXCO/1148/TNMW/Revised VDA 2020, dated **04.06.2020**–ல் தெரிவித்துள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் இராணுவத்தினர் கழகத்தைச் சார்ந்த 18 பாதுகாவலர்களுக்கு (Security Guard) வழங்கப்படும் அகவிலைப்படியுடன் கூடிய மாத ஊதியத்தினை ரூ.**16639/–** லிருந்து ரூ.**19239/–** ஆக உயர்த்தி ஊதியம் வழங்கவும், மேற்கண்ட காலத்தில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிலுவை தொகை **01.04.2020** முதல் வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 76:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(சி3/990/2010-மை.அ)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 25-ல் அமைந்துள்ள பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தினை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ.13.08 மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி பேருந்து நிலையத்தில்

அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக அப்பகுதியில் உள்ள வணிக வளாக கடைகள், துணை மேயர் குடியிருப்பு, நவீன கட்டண கழிப்பிடங்கள், பொது மக்கள் காத்திருக்கும் ஷெட்டுகள், பேருந்து நிலைய சுற்றுச்சுவர் மற்றும் சிறிய மணிக்கூண்டு கோபுரம் ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பேருந்து நிலைய பகுதியில் உள்ள மேற்குறிப்பிட்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி, வார்டு எண் 25-ல் அமைந்துள்ள பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தினை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.13.08 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி பேருந்து நிலையத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக அப்பகுதியில் உள்ள வணிக வளாக கடைகள், துணை மேயர் குடியிருப்பு, நவீன கட்டண கழிப்பிடங்கள், பொது மக்கள் காத்திருக்கும் ஷெட்டுகள், பேருந்து நிலைய சுற்றுச்சுவர் மற்றும் சிறிய மணிக்கூண்டு கோபுரம் ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பேருந்து நிலையப் பகுதியில் உள்ள மேற்குறிப்பிட்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 77:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/2950/20-பாளை)

---

8) திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 24-ல் அமைந்துள்ள பாளையங்கோட்டை நேருஜி சிறுவர் கலையரங்கத்தில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.11.97 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்திப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி நேருஜி கலையரங்க பழைய மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடம், சுற்றுச்சுவர் மற்றும் அப்பகுதியில் உள்ள சிறிய கட்டிடம் ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி நேருஜி சிறுவர் கலையரங்கம் அமைந்துள்ள பகுதியில் உள்ள மேற்குறிப்பிட்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, வார்டு எண் 24-ல் அமைந்துள்ள பாளையங்கோட்டை நேருஜி சிறுவர் கலையரங்கத்தில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.11.97 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்திப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி நேருஜி கலையரங்க பழைய மற்றும் பழுதான கட்டிடம், சுற்றுச்சுவர் மற்றும் அப்பகுதியில் உள்ள சிறிய கட்டிடம் ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி நேருஜி சிறுவர் கலையரங்கம் அமைந்துள்ள பகுதியில் உள்ள மேற்குறிப்பிட்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 78:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/2951/20-பாளை)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 5% RM தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு திருமதி.வி.தமிழ்செல்வி ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்டு 10.09.2019ம் தேதிய விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | தொகை (ரூ) | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | Construction of Drain & Culvert at Krishnaperi W.No.52 | 18,779 | :Lapsed 2015-16 P.No.10 |

அலுவலகக் குறிப்பு:

மேற்படி தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ளது. 5% RM தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)-ன்படி 5% RM தொகை ரூ.18,779/- மட்டும் திருமதி.வி.தமிழ்செல்வி ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 79:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(மதிப்பீட்டு எண் 79/12-13)

---

10) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்பு/பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி வைப்புத் தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு திரு.M.தனபால், ஒப்பந்ததாரரால் 23.10.2019-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of work | EMD / FSD | Register Details |
|---|---|---|---|
| 1 | Construction of PHC – 1st floor at Salai Street Vannarpettai in W.No.9 | Rs.10000/- | Thatchai Zone Deposit Register 2015-16 P.No.12, 13 |
| 2 | | Rs.10000/- | |
| | Total | Rs.20000/- | |

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட விபரப்படி உள்ள வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-ஆக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)-ன்படி தொகை ரூ.20000/-ஐ மட்டும் திரு.M.தனபால், ஒப்பந்ததாரருக்கு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 80:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(மதிப்பீட்டு எண் 99/15-16)

---